# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./SC/7–12, 27–02–2009 நாளிட்டது )**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பினை குறித்துரைத்து அறிவிக்கை செய்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி –VI, பிரிவு 2–இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ள நுகர்வோரின் தேவைக்குறைப்பின் பேரில், இந்த விதித் தொகுப்பிலுள்ள கட்டுப்படுத்தும் வகைமுறைகளினால், நுகர்வோரின் தேவைக்குறைப்பில் ஒருசில இடர்ப்பாடுகள் இருப்பதாலும் ;

மற்றும் நுகர்வோரின் தேவைக்குறைப்பு பொறுத்து இடர்ப்பாடுகளை நீக்கும் தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளுக்குத் திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அத்தகையத் திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவினால் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு, அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன்மூலம் பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைத்துள்ளது :

**2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம் ) விதித் தொகுப்பு**

1. <u>குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் </u>:

(a) இந்த விதித் தொகுப்பு, “2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இது, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

2. <u>தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் 17ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம் </u>:

தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பில், 17ஆம் ஒழுங்குமுறைவிதியில், (6) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதி விட்டுவிடப்படுதல் வேண்டும்.

[தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி]

இரா. பாலசுப்பிரமணியன்
செயலாளர்